**உடுமலைப்பேட்டை நகராட்சி**

**22.6.2018 ம் தேதிய சாதாரணக்கூட்ட மன்ற நிரல்**

<table>
<tr><th>Sl No</th><th>MCR No</th><th>Subjects in Agenda</th><th>Decision of the council</th></tr>
<tr><td>1</td><td>613</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை மேம்படுத்தும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் உத்திரவின்படி கீழ்க்கண்ட இடங்களில் “Micro Composting Centre” அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>தேர்வு செய்யப்பட்ட இடங்கள்</th><th>அளவு/எண்ணிக்கை</th><th>தொகை (ரூ.இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>சிங்கப்பூர் நகர் சுகாதார வளாகம்</td><td>3 TPD</td><td>39.40</td></tr>
<tr><td>2.</td><td>நகராட்சி சந்தை வளாகம்</td><td>5 TPD</td><td>78.00</td></tr>
<tr><td>3.</td><td>முனீர் நகர்</td><td>4 TPD</td><td>69.00</td></tr>
<tr><td>4.</td><td>பேட்டரி வாகனம் வாங்குதல்</td><td>12 Nos</td><td>21.60</td></tr>
<tr><td></td><td colspan="2">மொத்தம்</td><td>208.00</td></tr>
</table>
எனவே மேற்கண்ட இடங்களில் தடுப்புச்சுவர் மற்றும் அனைத்து அடிப்படை கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு உரிய நிர்வாக அனுமதி வேண்டியும், மேலும் மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவினத்தினை அரசிடமிருந்து முழு மானியமாக பெற்று பணியினை மேற்கொள்ளவும், நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு உரிய கருத்துருக்கள் அனுப்புவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு :</u> மன்றம் அனுமதி வழங்கலாம்<br>
ந.க.எண்.834/2018/இ1</td><td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td></tr>
<tr><td>2</td><td>614</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சியில் அமைந்துள்ள 33 வார்டுகளிலும் 15768 எண்ணிக்கையிலான குடியிருப்புகள் அமைந்துள்ளன அவற்றில் ஏற்கனவே 10331 எண்ணிக்கையில் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 5437 எண்ணிக்கையிலான வரிவிதிப்பில் அங்கீகாரமில்லாத மனைப்பிரிவு குடிநீர் இணைப்பு வழங்க இயலாத சிறிய கடைகள் மற்றும் ஒரு கட்டிடத்தில் அமைந்துள்ள கூடுதல் வரிவிதிப்புகள் ஆகியவை நீங்கலாக 2759 எண்ணிக்கையில் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட வேண்டியுள்ளது. அதனை நகராட்சி மூலம் பணிகள் மேற்கொண்டு வீட்டுக்குழாய் இணைப்புகள் வழங்கிவிட்டு அதன் பின்னர் வீட்டு உரிமைதாரரிடம் மேற்படி செலவினத் தொகையினை வசூலிக்கவும், மேலும் பணிகள் மேற்கொள்ளுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.245.00 இலட்சத்திற்கு (ரூபாய் இருநூற்று நாற்பத்து ஐந்து இலட்சம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு உரிய நிர்வாக அனுமதி பெரும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு அனுப்பலாம், மேலும் மேற்கண்ட பணிகளுக்கு தேவைப்படும் நிதியினை IGF/CGF/IUDM ஆகிய ஏதேனும் அரசு திட்ட நிதியின் கீழ் மானியமாக பெறுவதற்கும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு:-<br>
1. நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு கருத்துரு கோரி கடிதம் அனுப்புவதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2. நகராட்சியின் நிதிநிலையினை கருத்தில் கொண்டு முழு வட்டியில்லாக் கடனாகவோ அல்லது மானியமாகவோ பெறுவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண் 280/2017/இ2</td><td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr><td>3</td><td>615</td><td>இந்நகராட்சியில் புதியதாக அலுவலக கட்டிடம் கட்டப்பட்டு பணிகள் யாவும் முடிவுற்று தற்போது பயன்பாட்டில் உள்ள நிலையில் மேற்படி கட்டிடத்தில் Collection Centre-ல் போதுமான Partition இல்லாததால் பாதுகாப்பு இல்லாத நிலையும் பணி பரிவர்த்தனை செய்ய மிகுந்த சிரமமாக உள்ளதால் TANSI நிறுவனம் மூலம் Partition ஏற்பாடுகள் செய்ய விலைப்புள்ளிகள் கோரப்பட்ட பொழுது ரூ.732568.00-க்கு விலைப்புள்ளி கொடுத்துள்ளார்கள். வசூல் பணியின் அவசர அவசியம் மேற்படி TANSI நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்கப்பட்டதையும், மேற்படி தொகையினை முன்பணமாக செலுத்தவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>அலுவலகக் குறிப்பு:- வசூல் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 1126/ 2018/ இ1</td><td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td></tr>
<tr><td>4</td><td>616</td><td>இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.28ல் உள்ள சிங்கப்பூர் நகர் நகராட்சி பள்ளியின் சுவர் மற்றும் கழிப்பறையில் மராமத்து பணிகள் மேற்கொள்ளும் பணி ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண்.458 நாள்:-27.11.2017-ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. 01.06.2018ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன அவை,<br>
<table>
<tr><td>1.</td><td>திரு.வி.சிதம்பரம், உடுமலைப்பேட்டை</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 4.50% அதிகம்</td></tr>
<tr><td>2.</td><td>திரு.ஆர்.சுப்பிரமணியன், ரெட்டியப்பட்டி</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 10.59% அதிகம்</td></tr>
</table>
எனவே மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக கொடுத்துள்ள திரு.வி.சிதம்பரம், உடுமலைப்பேட்டை (மதிப்பீட்டை விட 4.50% அதிகம்) ஒப்பந்ததாரரிடம் விலைக்குறைப்பு (Negotiation) கேட்கப்பட்டதில் விலைகுறைப்பு செய்ததில் மதிப்பீட்டை விட 4.25% அதிகமாக கொடுத்துள்ளார்.<br>எனவே மேற்கண்ட திரு.வி.சிதம்பரம், உடுமலைப்பேட்டை ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது<br><u>அலுவலகக்குறிப்பு:–</u> மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 9469/ 2017/ இ1</td><td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td></tr>
<tr><td>5</td><td>617</td><td>இந்நகராட்சிக்கு சொந்தமான பழனிப்பாதையில் உள்ள அம்மா உணவகத்தில் அலுமினிய தட்டு, கரண்டி, திரைசீலை மற்றும் இதர பொருட்கள் வழங்குதல் மற்றும் கிரைண்டர், மிக்சி போன்ற எலக்ட்ரிக் சாதனங்களை பழுது நீக்கும் பணி (1 வருட கால பராமரிப்பு பணி) ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண்.459 நாள்:-27.11.2017-ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. 01.06.2018ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன அவை,<br>
<table>
<tr><td>1.</td><td>திரு.வி.சிதம்பரம், உடுமலைப்பேட்டை</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 4.76% அதிகம்</td></tr>
<tr><td>2.</td><td>திரு.ஆர்.சுப்பிரமணியன், ரெட்டியப்பட்டி</td><td>:</td><td>மதிப்பீட்டை விட 8.00% அதிகம்</td></tr>
</table>
எனவே மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக கொடுத்துள்ள திரு.வி.சிதம்பரம், உடுமலைப்பேட்டை (மதிப்பீட்டை விட 4.76% அதிகம்) ஒப்பந்ததாரரிடம் விலைக்குறைப்பு (Negotiation) கேட்கப்பட்டதில் விலைகுறைப்பு செய்ததில் மதிப்பீட்டை விட 4.51% அதிகமாக கொடுத்துள்ளார்.</td><td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>எனவே மேற்கண்ட திரு.வி.சிதம்பரம், உடுமலைப்பேட்டை ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:–</u> மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 3171/ 2015/ இ1</td>
<td></td>
</tr>
<tr>
<td>6</td>
<td>618</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பணியில் திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ள Bailing Machine -5 Nos, Drilling machine -1 No வாங்கி வழங்கவும் செலவினம் ரூ.35000/- மேற்கொள்ளவும் அதற்கான மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக்ககுறிப்பு - மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் 1127/2018/எச்1</td>
<td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>7</td>
<td>619</td>
<td>இந்நகராட்சியின் பொதுசுகாதார பிரிவில் குப்பை அள்ள பயன்படுத்தப்படும் வாகனம் எண் TN W 3497 F ற்கு தகுதி சான்றிதழ் பெறும்பொருட்டு வாகனத்தில் உள்ள அனைத்து பகுதுகளையும் சரி செய்தல் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.89000/–ற்கு ஆணையாளர் (ம) தனி அலுவலரின் முன்அனுமதி பெறப்பட்டுள்ளது. பணிகள் மேற்கொள்ளும்பொருட்டு 14.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>விலைப்புள்ளிகள் விபரம்</th><th>தொகை</th></tr>
<tr><td>1.</td><td>மெசர்ஸ் குருவாயூரப்பன் ஆட்டோமொபைல்ஸ், டுமலைப்பேட்டை</td><td>ரூ.86,640/–</td></tr>
<tr><td>2.</td><td>மெசர்ஸ் பி.பி.ஷெரீப் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், பொள்ளாச்சி</td><td>ரூ.89,865/–</td></tr>
</table>
வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள மெசர்ஸ் குருவாயூரப்பன் ஆட்டோமொபைல்ஸ், உடுமலைப்பேட்டை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:–</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 1981/ 2018/ எச்1</td>
<td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>8</td>
<td>620</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான கணபதிபாளையம் உரக்கிடங்கில் (Bio-Mining) நவீன முறையில் சுத்தம் செய்து உரக்கிடங்கினை புதுப்பிக்கும் பணிக்கு திட்ட அறிக்கையினை நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலகத்தில் சமர்பிக்க ஏதுவாக Digital Volumetric Survey எடுக்க வேண்டியுள்ளதால் மேற்கண்ட Survey மேற்கொள்ள ரூ.0.40 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்குள் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி Digital Volumetric Survey பணியினையும், திட்ட அறிக்கை தயார் செய்யும் பணியினையும் ஒப்படைப்பு பணியாக M/s.ALG INTERNATIONAL நிறுவனம் மூலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u> மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 1058/ 2018/ இ1</td>
<td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>9</td>
<td>621</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணிமேற்கொள்ள 2018-2019ம் நிதியாண்டிற்கு ரூ.40 லட்சம் செலவீனத்திற்கு நகரமன்ற தீர்மானம் எண் நாள் ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் ஏற்கனவே மேற்கண்ட பணியை மேற்கொள்ளும் M/s. Southern Solid waste Management நிறுவனம் ஏற்கனவே தமது ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையின் அடிப்படையில் தங்களது ஒப்பந்தப்பணியை ஜூலை 2018 முதல் நீட்டிப்பு செய்து வழங்கிட கோரப்பட்டுள்ளது தற்சமயம் மழைக்காலம் துவங்கவுள்ளதாலும், டெங்கு காய்ச்சல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைப்பணி மேற்கொள்ளுதல் அவசியமாகிறது எனவே M/s. Southern Solid waste Management நிறுவனத்தின் ஒப்பந்தப்பணியை 2018-2019ம் நிதியாண்டிற்கு மேலும் 9 மாதங்களுக்கு 58 நபர்களை பணியில் ஈடுபடுத்திக்கொள்ள நீட்டிப்பு வழங்கலாம்.<br>அலுவலகக்குறிப்பு:- அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் 1722/2015/எச்1</td>
<td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>10</td>
<td>622</td>
<td>2018-2019 முதல் 2020-2021 வரையிலான உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட மத்திய பேருந்து நிலையத்தினுள் பூ சுற்றி விற்பனை செய்ய உரிமத்திற்கான<br>ஏலம் 25.05.2018 அன்று நடைபெற்றதில் பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில். வரப்பெற்ற ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கீழ்கண்டவாறு,
<table>
<tr><th rowspan="2">வ.எண்</th><th rowspan="2">ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோருபவர் பெயர் மற்றும் விபரம்</th><th colspan="2">ஒரு மாத வாடகை (ரூ)</th></tr>
<tr><th>புதியது</th><th>பழையது</th></tr>
<tr><td>1.</td><td>திரு.எம். காமாட்சி கண்ணன்<br>த/பெ.பி. மகாலிங்கம்,<br>16, செஞ்சேரி ரோடு (கிழக்கு)<br>ஏரிப்பாளையம்.<br>உடுமலைப்பேட்டை</td><td>4,76,942</td><td>4,54,230</td></tr>
</table>
மேற்கண்ட ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளிகளில் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரிய திரு.எம். காமாட்சி கண்ணன் என்பவரின் ஏலக்கேள்வியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், இவர் கோரியுள்ள தொகை பழைய வாடகைக்கு அதிகமாக உள்ளது.<br>அலுவலகக்குறிப்பு:–<br>1. மேற்காண் இனம் கடந்த மூன்றாண்டுகளுக்கு முன் 2015-2016ல் ஏலம் விடப்பட்டதில் ரூ.4,12,080/- க்கு ஏலம் விடப்பட்டு 2016-2017ம் ஆண்டுக்கு 5% உயர்வு செய்யப்பட்டு ரூ.4,32,600/- மற்றும் 2017-2018ம் ஆண்டுக்கு 5% உயர்வு செய்யப்பட்டு ரூ.4,54,230/-க்கு ஏலம் விடப்பட்டது.<br>2. தற்போது கோரப்பட்ட ஏலக்கேள்வி தொகையானது கடந்தாண்டை விட ரூ22,712/- கூடுதலாக உள்ளதால் தற்போது வரப்பெற்ற திரு.எம். காமாட்சி கண்ணன் என்பவரின் ஏலக்கேள்விறை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.<br>ந.க.எண்8508/2017/அ2</td>
<td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| **11** | 623 | மாவட்ட ஆட்சித் தலைவர் திருப்பூர் மற்றும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் கோவை அவர்களின் நேரடி உத்தரவின்படி மாண்புமிகு கால்நடைத்துறை அமைச்சர் மற்று.ம் மாவட்ட ஆட்சியர் ஆகியோரின் தலைமையில் அனுமதியற்ற மனைப்பிரிவுகள் மற்றும் மனைகளை முறைப்படுத்துதல் முகாமினை உடுமலைப்பேட்டை நகராட்சியில் **23.06.2018** மற்றும் **27.6.2018** ஆகிய இரு நாட்கள் நடத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி மேற்காண் இரு தேதிகளில் முகாம் நடத்தவும் முகாம் நடத்த தேவையான மண்டபம், பொதுமக்கள் டோக்கன் பெறுவதற்குரிய AC சீட் அமைத்தல் படிவங்கள் அச்சடித்தல் ஆட்டோ மூலம் விளம்பரப்படுத்துதல், தேவையான இடங்களில் விளம்பரபடுத்த FLEX அமைத்தல் ஒலிபெருக்கி அமைத்தல், சேர், டேபிள், ஜமுக்காளம் அமைத்தல் ஆகியவற்றிற்கான உத்தேச செலவீனம் ரூ. 2,00,000/– (ரூபாய் இரண்டு லட்சம்)க்கும் ம.ன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு :–</u>**<br>அவசர அவசியத்தை முன்னிட்டு **23.6.2018** மற்றும் **27.6.2018** ஆகிய இரு நாட்கள் முகாம் நடத்தவும் அதற்காகும் உத்தேச செலவின தொகை ரூ. 2,00, 000/–(ரூபாய் இரண்டு லட்சம்) க்கும் அனுமதிக்கலாம்.<br>ந,க.எண்.<br>**4415/2017/எப்1** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **12** | | நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண். 2706/2015/UPA-2.நாள். 01.07.2016 ந் தேதிய கடிதத்தில் உடுமலைப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் வீடு இல்லாத ஏழை மக்களுக்கு NULM .தி.ட்ட.த்தின் கீழ் தங்கும் விடுதி அமைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி உடுமலைப்பேட்டை நகராட்சி சர்தார் வீதியில் சர்வே வார்டு D, பிளாக் எண். 17, நகரளவு எண். 48 ல் நகராட்சிக்கு சொந்தமான 324 சதுரமீட்டர் இடத்தில் 111.71+8.67 சதுர மீட்டர் பரப்பளவில் NULM திட்டத்தின் கீழ் வீடு இல்லாத ஏழை மக்களுக்கு (தரைதளம் மட்டும்) தங்கும் விடுதி அமைக்கவும் இதற்கு கட்டிட அனுமதி கோரி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் கோவை அவர்களுக்கு உத்தேச வரைபடங்களை அனுப்பி அனுமதி பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.,<br>**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம்<br>ந,க.எண். **2155/2016/எப்1** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

(ஒப்பம்) கே.எம். சுதா,
ஆணையாளர்(கூ.பொ) / தனி அலுவலர்

**ஆணையாளர்(கூ.பொ)**
**உடுமலைப்பேட்டை நகராட்சி**